தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VII. } ருதிரோத்காரிஸு மார்கழிமீ { பகுதி 9

தேயிலை, காப்பி.

Tea and Coffee.

ஸ்ரீமான் D. ராமஸ்வாமி அய்யங்கார் B. A., B. L. எழுதியது.

தேகாதாரத்திற்காக வென்று நாம் உட்கொள்ளும் உணவைத் தவிர நாமெல்லோரும் தேக சுகத்திற்கெனக் கருதி வேறு பல வஸ்துககளைத் தினந்தோறும் உட்கொள்ளுகிறோம். இவைகட்கு உணவு என்னும் சொல் நன்கு பொருந்தாது. ஆயினும் உட்கொள்ளுவன வெல்லாம் உணவு என்னும் வகையில் இவைகளும் உணவே இப்பதப் பிரயோகத்தைக்கொண்டே இவ்வஸ்துக்களெல்லாம் சரீரபோஷணத்திற்கு இன்றியமையாதன வென்று மாத்திரம் பிரமித்தல் கூடாது. இவ்விதம் சுத்த ஆகாரமாயல்லாது, நமக்கெல்லாம் பெரிதும் பழக்க மேறிவிட்ட வஸ்துக்களில் முக்கியமானவையான மேலே குறிப்பிட்ட தேயிலை காப்பி என்ற இவ்விரண்டைக் குறித்துச் சற்று கவனிப்போம்.

தேத்தண்ணீரும் காப்பியும் ருசியில் மிகவும் வேறுபட்டிருப்பினும் அவைகளுக்குச் சாராம்சமாய், அத்தேயிலையி

லும் காப்பியிலும் நாம் நாடிச் செல்லும் வஸ்துவானது ஒன்றே. அதை ஆங்கிலத்தில் "தேயின்" என்றும் "காப்பின்" என்னும் சொல்லுவார்கள். அதற்கு நமது தேகத்தில் ஒருவித அபூர்வ மாறுதல் ஏற்படுத்தக் கூடிய சக்தி வாய்ந்திருக்கிறது. இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட வஸ்துக்களில் மனிதர்களுடைய மூளையின் மேல் சக்தி செலுத்தும் திறமை இத் தேயினுக்கு வாய்ந்தது போல் வேறெதற்கும் இல்லை. கள், சாராயம், முதலியன மூளையைத் தூண்டி விடுவனபோல் காணும். ஆனால் அது வெளித் தோற்றமேயொழிய வாஸ்தவமல்ல. உண்மையில் இத்தேயின் என்னும் பதார்த்தம் ஒன்றுதான் நமது மூளையைக் கிளப்பி அதிகச்சுறுசுறுப்பை யூட்டி அதன் வேலையைச் சுத்தமாக்குகிறது. தூக்கத்தைப் போக்கி மன எழுச்சியை விருத்தியாக்கும் சக்தி இந்தத் தேயின் என்னும் பொருளுககு அசாதாரணமான இயல்பு. இதன் பொருட்டன்றோ பரீக்ஷைகளுக்குப் படிக்கும் மாணவர்கள் தேயிலையையும் காப்பியையும் அபரிமிதமாக உபயோகிக்கிறார்கள். இங்கிலாந்தில் வைத்தியப் பரீக்ஷைகளுக்குப் படிக்குமவர்கள் நேராக தேயின் என்னும் வஸ்துவையே உட்கொள்ளுவது வழக்கமாம் தேயின் என்பது அதி வெண்மையான ஒரு பொடி. நாக்கிற்கு அதிக கசப்பான வஸ்து. ஆனால் அதனிடத்து இந்த அபூர்வ சக்தியமைந்துள்ளது. இரவில் எந்நேரமானாலும் ஓயாமல் உட்கார்ந்து நித்திரையினால் பிடிக்கப்படாது, அலுவல்களைக் கவனித்து வர பெருஞ்சாதன மாகிறது. மேலும் மூளையைச் சற்றே தூண்டி விட்டு தன் சக்தி குன்றின பிறகு அதே மூளையை ஒன்றிற்கும் உதவாதபடி அதன் வலிமையை வற்றச் செய்யும் பிற வஸ்துவைப்போலல்லாது இது தன்னால் ஏற்படும் மாறுபாடு ஓய்ந்தவுடன் ஒருவிதக் கோளா றின்றி முன் போன்ற ஸ்திதிக்கே கொண்டு விடும். அதிகமாகவும் நீடித்தும் உபயோகிப்பதால்

தீங்கில்லை. ஆனால் நாள்பட நாள்பட அதை உபயோகிக்கும் சரீரத்தின்மேல் அதன் சக்தி குன்றிப்போம். புதிதாய் உபயோகிக்குமவன் பேரில் உண்டாக்கும் மாறுதல் பழகினவன் பேரில் உண்டாக்காது.

மேல் கூறியவற்றைக் கொண்டே இது சர்வசஞ்சீவி என்று தீர்மானிக்கக் கூடாது. அதனுடைய இயற்கை அவ்வாறென்று குறிப்பிட்டோம். இனி அதைக் கொண்டே அது சுகாதாரத்தின் முக்கிய அங்கமான நல்ல நித்திரைக்கு பங்கம் விளைவிக்கும் என்பது ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. கண் விழிப்பது அரிதாகுமவற்கு உபயோகமாயிருப்பின் தூக்கம் பிடிக்காதவர்களுக்கு அது விஷத்திற்குச் சமானமாம். தூக்கம் கெட்ட ஸ்வபாவமுடையவர்கள் இதைப் பகலுக்குமேல் ஏது காரணம்பற்றியும் உபயோகித்தல் கூடாது தேயிலையையும் காப்பியையும் உபயோகிக்காமல் இருப்பதுதான் நலம். உபயோகித்துத் தீரவேண்டுமென்றால் அதற்குரிய காலம், அளவு, முதலிய விஷயங்களில் ஒருவிதமான நெறி மேற்கொள்ள வேண்டும். அகப்பட்டபோதெல்லாம் சாப்பிடுவதென்று வைத்துக்கொண்டால் சீக்கிரத்தில் அதன் கீழடிமையாய் அதற்காக நம் அன்னம், நித்திரை, ஆரோக்கியம் முதலிய எல்லாவற்றையும் இழக்க நேரிடும்.

காப்பியாலும் தேயிலையினாலும் வரும் கேடு பெரும்பாலும் அவைகளிலடங்கி யிருக்கும் ஒருவிதமான திராவகத்தினால் ஏற்படுகிறது அதற்கு ஆங்கிலத்தில் "டான்னின்" என்று பெயர். இந்த வஸ்து தேயிலையில அபரிமிதமாய் நிறைந்துள்ளது. காப்பிக் கொட்டையில் அத்தனை கிடையாது. இதன் சுபாவம் மிகக் கெட்டது. சுத்தமான டான்னின்னில் ஒரு துளி யெடுத்து நாக்கில் வைத்துக்கொண்டால் அது உடனே வாயை ஈரமில்லா துலர்த்திவிடும். இதுபோலவே

வயிற்றுக்குள் சென்றபிறகு இது வயிற்றை உலர்த்தி ஜீர்ண சக்தியை மந்தப் படுத்துகிறது. ஆகாரம் ஜீரணிப்பதற்கு வேண்டி வயிற்றினுட் சுவர்களிலிருந்து பலவிதமான ரஸங்கள் உண்டாகின்றன. இந்த டான்னின் அவற்றையெல்லாம் உலர்த்திவிட்டால் அப்புறம் ஜீர்ணசக்தி எங்கிருந்து வரும்? நாளடைவில் ஆகாரம் செல்லாது சரீரம் மெலிந்துவிடும் என்பது சொல்லவேண்டியதில்லை. இதுதான் தேயிலையினல் வரும் பெருந்தீங்கு.

இவ்வாறு வரும் சேட்டைத் தேயிலைப் பானத்தை வகையாய் தயாரிப்பதனுல் ஒரு விதமாகக் குறைக்கலாம். தேயிலையிலிருந்து உஷ்ணமான நீரில் அதனுடைய ரஸத்தைக் கிரஹிக்கிறோம். அந்த நீர்தான் நமக்குத் " தேத்தண்ணீர் " என்னும் பானமாகிறது. நன்ருக ஆராய்ச்சி செய்தவர்கள் தேயிலையிலுள்ள சாரத்தைப் பொங்கும் நீர் மூன்று நிமிஷ காலத்தில் முழுமையும கிரஹித்து விடுகிறது என்று கண்டு பிடித்திருக்கிருர்கள். அந்த மூன்று நிமிஷத்தில் அந்த இலையிலுள்ள தேயின் முழுவதும் நீரில் கிரஹிக்கப் படுவதுடன் தேயிலையினுடைய மணம் முழுவதும் நீரில் இறங்கிவிடுகிறது. அதற்கியல்பான நல்ல வாசனை உடனே வந்து விடுகிறது. இனி அந்த நீர் அதே இலைசளுடன் சம்மந்தப்பட்டிருப்பதால் ஒருவித லாபமுமில்லை அந்த இலைகளிலுள் ளடங்கிய தேயினும் நன் மணமும் அதை விட்டு விலகியபடியால் இனி சரீரத்திற்கு ஒருவிதமாயும் பயன் படாததாயும் ஹானி விளைவிக்கக் கூடியதாயுமுள்ள டான்னின்தான் கிரஹிக்கப்படும். சுமார் முக்கால்மணி அல்லது நாற்பத்தைந்து நிமிஷம் வரையில் இந்த டான்னின் அந்த நீரில் கிரஹிக்கப்படுகிறது. முதல் மூன்று நிமிஷங்களில் இந்த டான்னினில் மிகக் குறைவுதான் நீரில் பிரவேசிக்கிறது. அதற்குமேல் வெகுவாய் அதிகரித்து மேலேகுறித்த முக்கால்மணியில் முழு

வதும் இறங்கிவிடுகிறது. இதனுல் மூன்று நான்கு நிமிஷங்களுக்கு மேல் எக்காரணம்பற்றியும் தேயிலேயையும் உஷ்ண நீரையும் ஒன்று சேர்த்தல்கூடாது என்பது விளங்குகிறது.

இன்னும், தண்ணீரையும் தேயிலேயையும் ஒரு பாத்திரத்தில் சேர்த்துக் கொதிக்கவைத்தல் கூடாது. அது தேயிலேயின் ருசியைக் கெடுத்து விடுவதுடன் கூட இக்டானின்னிலே அதிசீக்கிரத்தில் கிரஹிக்கச்செய்யும். தேத்தண்ணீர் தயாரிக்கவேண்டியதானுல் சூடான ஒருபாத்திரத்தில், தேயிலேகளேப்போட்டு அவற்றின்மேல் கொதிக்கும்நீரை அளவுபடிவிடவேண்டும். மூன்று அல்லது நான்குநிமிஷங்கள் (அதற்குமேல் கூடாது) கழிந்து வடிக்கட்டி, நீரையும் இலேயையும் பிரித்து விடவேண்டும். பாத்திரம் சூடாயிருக்கவேண்டியது ஏனென்றுல் குளிர்ந்திருக்கும் பாத்திரத்தில் கொதிக்கும் நீரை விட்டால் நீரின் உஷ்ணம் சீக்கிரம்குறைந்துபோம். உஷ்ணம் குறைந்தால் அந்தநீருக்கு தேயிலேயிலிருந்து ரஸத்தைக்கிரஹிக்கும் சக்தி குறைந்துபோம். அப்படிப்பட்ட நீரில் தேயிலேயின் முழுவாசனேயும் ஏறுது. தேத்தண்ணீர் தயாரிப்பதற்கு அருவிநீர்முதலிய ஓடும்நீர்கள் உசிதமென்று, தேயிலே விஷயத்தில் அதிநிபுணர்களான சீனதேசத்தார்கள் அபிப்பிராயப்படுகிருர்களாம். ஏனெனில் அம்மாதிரி நீர்களில் நிறையகாற்றுக்கள் அடங்கியிருக்கும். இந்தக்கணக்கில் கிணற்றுஜலம்தான் உதவாதுபோகும். தேயிலேப்பானத்துக்கு அதை உபயோகிக்கவேகூடாது. மேலும் ஒருதரம் உபயோகித்த தேயிலேயை மறுமுறை உபயோகிக்கக்கூடாது. முதல் தடவையிலேயே அதிலிருந்து பெறவேண்டியவையும் பெறத்தகுந்தவையும் வேளியேறிவிட்டபடியால் இனி அது உபயோகமற்றதுதான்.

காப்பி தயாரிப்பதிலும் இவ்வாறு சிலவிதிகள் அநுசரித்தால் நல்லது. முதலில் காப்பிக் கொட்டையைப் பக்குவமாக

வறுக்கவேண்டும். அதிகமாய்வறுத்துக் கரியாக்கவும்கூடாது, வறுபடாமல் பச்சையாய்வைக்கவும்கூடாது, நல்லபொன்வறுவலாய் வறுத்துவைத்துக்கொள்ளவேண்டும். முன்னதாகப் பொடியாக்கிவைத்துக்கொள்வது மிகவும் பிசகு. உபயோகத்துக்கு முன்னால் அப்பொழுதைக் கப்பொழுதுதான் தூளாக்கிக் கொள்ளவேண்டும். மற்றப்படி வெந்நீர் சேர்த்துக் கஷாயம் செய்யும்விதம் தேயிலைக்குச் சொன்னவாறுதான்.

மேலேசொல்லியபடி டானினின்விஷயத்தில் காப்பிக்கும் தேயிலைக்கும் அதிகவித்தியாசமில்லை. ஆனால் காப்பியில் ஒரு விதமான பலத்த வாசனையையுடைய ஒரு தைலம்போன்றவஸ்து உண்டு. அதனால் சிலருக்குக் காப்பி ஒத்துக்கொள்ளவதில்லை. அப்படிப்பட்டவர்கள் தேயிலையை அதிகமாக உபயோகிப்பார்கள். அதிகமானபொடி உபயோகித்து காப்பிக் கஷாயத்தை குழம்பாகச்செய்து சர்க்கரையையும் பாலையும் மட்டுப்படச் சேர்த்து சாப்பிட்டால் ரொம்ப தேயின் என்னும் பதார்த்தம் சரீரத்தில் புகும். இரவில்நெடுநேரம் கண்விழிக்கவேண்டாதவர்களும் இயற்கையாகவே தூக்கம் பிடிக்காதவர்களும் நல்லபசிதூக்கமுடைய குழந்தைகளும், இந்தக்காப்பியை உபயோகிக்காமல் இருப்பதுதான் நலம் என்று அறியவேண்டும்.

"டீ காப்பி" என்ற இரண்டு பொருள்களுடன் மூன்றாவதான "கோக்கோ" என்னும் பொருளும் பெரும்பாலும் நமது உபயோகத்திலிருந்து வருகிறது. இந்தக் கோக்கோவிலும் "காப்பின்" என்பதிற் கொப்பான வஸ்து இருக்கிறது. ஆனால் அதனுடைய தூண்டுதல் சக்தி மிகக் குறைவு. இது பற்றியே குழந்தைகளுக்கு தேயிலை காப்பியைக் காட்டிலும் கோக்கோவை அதிகமாகக் கொடுக்கலாம். அநேகர் கோக்கா நல்ல ஆகாரம் என்று நினைக்கிறார்கள்: அப்படியில்லை. ஆகாரமாயிருந்து சரீரத்தைப் போஷிக்கும் சக்தி கோக்கோவில் குறைவுதான். அதில் அடங்கியிருக்கும் கொழுப்பு ஒருவித

மாகப் பயன் படக் கூடினும் அதிகப் பட்டால் ஜீர்ணத்திற்குப் பாதகமாய்விடும். இந்தக் கோக்கோவிலும் கலப்பிதமாய்த் தயாரிப்பதனால் கலப்பிதமான கோக்கோ நமக்குக் கிடைக்கிறது. அதில் சில வாசனையும் சேர்ந்திருப்பதுடன் வயிற்றிற்குக் கெடுதி ஏற்படுத்தாது. இன்னும் சில அவ்வாறல்லா திருக்கும். அவரவர்கள் ஜவனித்து தங்களுக்கு கெது பிடிபட்டு வருகிறதோ அதையே உபயோகித்தல் வேண்டும்.

கோக்கோவுடன் சர்க்கரையை நிறையச் சேர்த்தால் "சாக்கலேட்" (Chocolate) என்று நம் குழந்தைகள் விரும்பும் பதார்த்தமாகிறது இதை நல்ல ஆகாரமென்று மேனாட்டார் அதிகமாய் உபயோகிப்பார்கள். நம் நாட்டில் குழந்தைகள் கடையிலிருந்து ஆசைக்காக வாங்கி சாப்பிடுவதைத் தவிர இதற்கு அதிகப்பட்ட உபயோகமே கிடையாது. மேனாட்டவர்களுக்குத் தினப்படி ஆகாரமாவதுடன் சண்டைகளில் அமர்ந்திருந்த ராணுவ சேனைகளுக்கு சாக்லேட் பேருதவியாய்ப் பயன்பட்டது என்று கேள்விப்பட்டிருக்கிறோம்.

மேலே குறித்த வஸ்துக்களெல்லாம் நமக்கு முக்கியமான ஆகாரமல்லவென்று மாத்திரம் மறக்காமலிருப்போமானால் அவைகளால் நமக்கு அதிகக்கெடுதி விளையாது பிராணாதாரமான உணவு என்று சிலாகித்துவிட்டால் அவைகளால் வரும் கேட்டை விலக்கமுடியாது; இதைப்படிப்பவர் பெரும்பாலும் இதற்குள்ளாகவே மேற்சொன்னவற்றில் ஒன்றிற்காவது அப்பியாசப்பட்டிருப்பதுடன் அடிமைப்பட்டுமிருப்பார்கள். அவர்களைப்பற்றியாவது அவர்களுடைய வழக்கத்தைப்பற்றியாவது நாம் குறைகூற வந்தவரல்ல. ஆயினும் அவர்களிடத்து ஒன்றே நாம் வேண்டுவது. தமக்குண்டான இவ்வப்பியாசத்தை நம்பினோரிடத்துக்கண்டித்தும், தம் குழந்தைகளிடத்து

வேரோடொழித்தும், தம்மோடொத்தவர்களுக்குக் கூடாது என்றுபோதித்தும் பிரயாசைப்படுவார்களாகில் நமக்கெல்லாம் பேருதவி புரிந்தவராவார்கள் இந்த வியாசத்தில் கூறியதெல்லாம் தேயிலை காப்பியின் ஆப்தசிநேகிதர்களுக்கே யொழிய இனி சிநேகிதம் செய்யவேண்டியவர்களுக்கல்ல அவர்களுக்குச் சொல்லவேண்டுவதெல்லாம் கொஞ்சமே அதன் வழிக்கே போகவேண்டாம் என்பதுதான். முக்கியமாய் நாம் நமது குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும். அவர்களை அருமையாய் வளர்த்து வருவதற்கு அநேக மார்க்கங்களுண்டு. ஆரோக்கிய சாஸ்திரத்திற்கு விரோதப்பட்டு பலவிதத்திலும் இப்பொழுதும் பிறகும் துன்பத்தை நிச்சயமாயும், இன்பத்தை சந்தேகமாயும் விளைவிக்கக் கூடிய இப்பதார்த்தங்களுக்கு வழக்கப் படுத்துவது பிசகென்று அறியவேண்டும்.

Don Quixote is made a Knight.

டான் க்விக்ஸாட் பட்டம் பெற்றது.

ஸ்ரீமான் B. A. பாஷ்யம் அய்யங்கார் B A., L.T. எழுதியது.

ஆயினும் இனிமேல் டான் க்விக்ஸாட்டைச் சத்திரத்தில் நிறுத்திவைப்பது தகுதியன்றென்று சத்திரக்காரனுக்குத் தோற்றியது. அவனை எப்படியாவது சத்திரத்தை விட்டு அனுப்பிவிட எண்ணி அங்குள்ளோரைச் சமாதானப் படுத்தினன் அவன் டான்க்விக்ஸாட்டை நோக்கி“ஐயா!கவசங்களை இரண்டுமணிநாவம் காப்பதே போதும். நீரோ நான்கு மணிகளாய்க் காவல் காத்து வருகிறீர். ஆகையால் இனித் தாமதமின்றி பட்டஞ் சூட்டுதற் கமரமாகிய சடங்கைத் தொடங்கலாம்” என்றான். க்விக்ஸாட்டும் சத்திரக்காரன் கூறியது உண்மையே யென்றெண்ணிக் கூடிய சீக்கிரத்தில் அதனைச் செய்து முடிக்கும்படி அவனை வேண்டினன். சத்திரக்காரன் க்விக்ஸாட்டைப் பார்த்து, ‘அச்சடங்கை இன்னவிடத்தில் தான் நடத்த வேண்டுமென்று ஒரு நியதியுமில்லை. அது எங்கு வேண்டுமானாலும் நடைபெறலாம். களத்திலோ, கோயிலிலோ, வேறெந்த விடத்திலேயோ நமது சௌகர்யத்துக் கேற்றபடி செய்துகொள்ளலாம், என்று கூறித் தன் கணக்குப் புத்தகத்தைக் கொண்டு வரும்படி தன் வேலைக்காரனுக்குக் கட்டளையிட்டான். பின் அங்கு வந்திருந்த இரண்டு மாதர்களையு மழைத்து ஒரு பக்கத்தி லிருக்கச் செய்தான். வேலைக்காரச் சிறுவனை விளக்கைப் பிடிக்கும்படி பணித்துப் பின் அச்சத்திரக்காரன் டான் க்விக்ஸாட்டை அரு

கேயழைத்து வணக்கமாய் முழந்தாளிட்டுப் பணியும்படி ஏவி ஞன்.

பிறகு தான் வைத்திருந்த கணக்குப் புத்தகத்தை எடுத் துச் சத்திரக்காரன் அதிலிருந்து ஏதோ படிப்பதுபோல் பா வனே செய்தான். அப்பால் அவன் தன் கையை உயர்த்தி முதலில் க்விக்ஸாட்டின் கழுத்தில் ஓரறை அறைந்து பின் தன் ஈட்டியின் புறத்தினல் அவனது முதுகில் மெதுவாய் ஓரடி யடித்தான். சத்திரக்காரன் அம்மாதருள் ஒருத்தியை விளித்து அவ்வீரனின் இடையில் அவ்விட்டியைச் செரு கும்படி கட்டளையிட்டான். இன்னெருத்தி போர் முள்ளினே மாட்டினுள். உடனே வீரன் அவர்களுக்குத் தன் வந்தனத் தைச் செலுத்தி அவர்களே வாழ்த்தினன். பின்பு டான் தனது புரவியாகிய ரோஸினென்ட் மீதேறி அச் சத்திரத்தினின்றும் புறப்பட்டான். சத்திரக்காரன் இவ்வளவிலாவது அவன் தொ லைந்தானே என்று மகிழ்ந்து அவனிடமிருந்து தனக்குச் சேர வேண்டிய தொகையையும் கேளாமலே அவனுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டான்

டான் க்விக்ஸாட் வியாபாரிகளைச் சண்டைக்கிழுத்தது. சாலைமத்தியில் நிகழ்ந்த சம்பவம்.

டான் க்விக்ஸாட் சத்திரத்தை விட்டுக் கிளம்பிய சிறிது நேரத்தில் நடந்த சம்பவம் வேறெவர்க்கேனும் நேர்ந்திருக்கு மாயின் அவர் உண்மையில் வீரராயிருந்தாலும் தம் ஊக்கங் குன்றி மனமழுந்துவது திண்ணம்

க்விக்ஸாட் நான்கு சாலைகள் கூடும் ஒரு சந்தியைக் குறுகினன். ஆங்கு அவன் மர்ஸியாவுக்குச் சென்று கொண் டிருந்த வியாபாரிகளிற் சிலரைப் பார்த்தான். தான் ஒருபெரிய வீரனென்று பலர்க்கும் புலப்படுத்துவதற்குச் சந்தர்ப்ப மிப் போது வாய்த்ததென்று அகமகிழ்ந்து தான் புத்தகங்களைப்

படித்து அறிந்திருந்த வீரர்களைப்போல் வெகு திறமையோடும் பராக்கிரமத்தோடும் நடந்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். அதற்கேற்ப அவன் அச் சாலைமத்தியில், நின்று அவ்வழியாய்ச் சென்று கொண்டிருந்த அப் பிரயாணிகளை நிறுத்தி இணையில்லாத சிறப்பினையுடைய டொபோஸோ நாட்டு டல்சினியாவாகிய லாமாங்கா சக்ரவர்த்தினிக்கு நிகரான சிமாட்டி வேறொருத்தியை உலகில் எங்கும் பார்த்ததில்லை என்று சத்தியம் செய்தபின்பே அவ்விடத்தை விட்டுப் போகலா மென்று நிர்ப்பந்திக்கத் தொடங்கினன்.

அவனுரைகளைப் பொருட்படுத்தாமல் தம்வழியே ஏகத் தங்களாலானமட்டும் முயற்சித்தும் டான்க்விக்ஸாட் அவர்களை விடவேயில்லை. இதன்பலனாக அவனுக்கும் அவ்வழிப்போக்கர்க்கும் வாதம் எழுந்தது. க்விக்ஸாட்கூறிய உரைகளைக்கேட்ட அவ்வியாபாரிகள் உடல்குலுங்க நகைத்ததைக்கண்டு நமதுவீரன் கடுஞ்சினமடைந்தான். அவன் தன் ஈட்டியை அவர்களுக்கெதிரே நீட்டிக்கொண்டே தன்குதிரையைவேகமாய் ஒருவன்மீது செலுத்தினன். அக்குதிரையின் கால்இடறி அது கீழேவிழுந்துவிடும் நிலைமைக்கு வந்தபடியால் அவ்வர்த்தகன் தப்பினன். அக்குதிரை தன்முழுவேகத்தோடுஞ் சென்று அவனைத்தாக்கி வீழ்த்தியிருப்பின் அவனது நிலைமை எவ்வளவு பரிதாபகர மாயிருந்திருக்கும்! அம்மிருகம் காலிடறியதும் அது க்விக்ஸாட்டையே கீழேதள்ளித்தானும் கீழேவிழுந்துவிட்டது. அவன்மேல் தரித்திருந்த கவசம் அவனை அழுத்தவே தரையினின்றும் எழுந்திருக்க அவனல் முடியாதுபோயிற்று.

அச்சமயத்தில் அவ்வர்த்தகனின் வேலைக்காரன் தன்யஜமானனை டான்க்விக்ஸாட் அவமானப்படுத்தி உபத்திரவித்ததற்காக வெகுண்டு முன்வந்து க்விக்ஸாட்வைத்திருந்த ஈட்டி

யைப்பிடுங்கித் துண்டு துண்டாக ஒடித்தெறிந்துக் கீழேவிழு ந்துகிடந்த கம்பீரனையும் அடித்து இம்சித்தான். ஐயோ! பாவம்! டான் ஒன்றும் செய்யமுடியாமல் பிணம்போல் தரையில் விழுந்துகிடந்தான். டான்க்விக்ஸாட்டை அவ்விடத்திலேயே அதே நிலையில் விட்டுவிட்டு அவ்வர்த்தகர்கள் தம்வழிநோக்கிச் சென்றனர். சிறிது நேரங்கழித்து அவ்விடத்தே தற்செயலாய்வந்த நாட்டுப்புறத்தானொருவன் டானின் எளியநிலை கண்டிரங்கி அவனை மெதுவாய்ச்சிரமத்துடன் தூக்கி அவனுடைய குதிரையின்மேல் ஏற்றிக்கவசத்தையும்பக்கத்தே தவைத்து அக்குதிரையை அவனதுவீட்டுக்கு கூட்டிச்சென்றான்.

டான்க்விக்ஸாட்டின்தேகத்திலுள்ள காயம் தீர்ந்து அவன் பூராய்க் குணமடைவதற்குள் அவனது தோழர்கள் அவனது நிலயத்திலிருந்த கந்தற் புத்தகங்களை யெல்லாம் நெருப்பிலிட்டுக் கொளுத்திவிட்டார்கள். அப்புத்தகங்களைப் படித்தே அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதென்று எண்ணி அவர்கள் அப்படிச் செய்தனர். அதனால் அவன் மனம் மீண்டும் தெளிதலடையும் என்று அவர்கள் எண்ணினார்கள். இரண்டுவாரங்களுக்குள் டான் க்விக்ஸாட்டின் தேகம் ஸ்வஸ்தமடைந்தது. நடந்துசெல்ல வன்மை பெற்றதும் டான் மறுபடியும் வெளியே செல்ல முற்பட்டான்.

இந்தத் தடவை தன்னுடன் ஒரு துரைமகனைத தனக்குப் பணியாளனாகக் கூட்டிச் செல்ல டான்க்விக்ஸாட் தீர்மானித்தான். அவன் சாங்கோபான்ஸா வென்னு மோரெளிய கூலிக்காரனைத் தன்னுடன் வரும்படி தூண்டினான். சாங்கோ ஒரு கிராமவாசி. கள்ளங்கபட மறியாதவன். தினம் கூலிவேலை செய்து யோக்கியமாய் வயிறு வளர்த்தவன். டான் அவனைப் பார்த்துக் கூடிய சீக்கிரத்தில் சமயம் வாய்க்கும்போது அவனை ஒரு தீவுக்கு அதிபதியாக்குவதாக வாக்களித்

தான். சாங்கோபான்ஸாவும் பெரு நிதி கிடைக்கப் பெற்ற வன் போல் மகிழ்ந்து டாப்பில் என்னும் பெயரையுடைய தன் கழுதையின்மீது ஏறிக்கொண்டு டான் க்விக்ஸாட் டைப் பின் தொடர்ந்து சென்முன். டானும் தனது அற் புத புரவி மீது ஏறி சாங்கோவையுங் கூட்டிக் கொண்டு வெகு துரிதமாய்ச் சென்முன். தனது நண்பர் தம்மைப் பின் பற்றித் தம்மை மேற் செல்லவொட்டாது தடுப்பதற்கு முன் னமே போய் விடவேண்டு மென்று இரண்டுபேரும் குதிரை களை இரவு முழுதும் வேகமாய்ச் செலுத்திக் காலை குறுகிய தும் வேகத்தைக் குறைத்தனர்.

தமிழ் மொழிகள்

Tamil Terms

ஸ்ரீமான் V. P. சுப்பிரமணிய முதலியாரவர்கள் மொழி பெயர்த்த எழுதிய கல்வி விளக்கம் என்னும் புத்தகத்தில் ஆங்காங்கு காணும் மொழிகளினின்று பொறுக்கி எடுக்கப் பட்டவையாகும்.

MATHEMATICS

கணிதநூல்

Parallel lines	சமதூரரேகைகள்
Perspective	இயல்புக் காட்சி
Cube	சமபக்க கனவடிவம்
Compasses	கவராசம்
Tetrahedran	சமநால் முக்கோணவடிவம்
Experimental demonstration	சோதனை நிரூபகம்
Original demonstration	சுவ நிரூபகம்
Technicalities	சங்கேதங்கள்
Solution	விடை
Problem	பிரசினம்
Theorem	நிரூபக சூத்திரம்
Premises	பூர்வ சித்தாந்தம்
Experience	அனுபவம்
Proportion	சரிமுறை இணை
Straight	நேர்
Curved	வளைவான
Horizontal	சமபரப்பு
Perpendicular	செங்குத்து
Oblique	சாய்வு

Outline	ரூபக் குறிப்பு
Corollary	சார்புத்துணிவு
Definite	வரையறையுடைய
Indefinite	வரையறையில்லாத
Observation	அவதானம்
Inference	அநுமிதி
Rule of three	திரயராசிகம்
Conic Section	சூச்சிய கணிதம்
Numerical Combination	எண்களின் சேர்க்கை
Decimal Notation	தசபின்னக் குறியீடு
Perpendicular from the centre of gravity	பூமியைநோக்கு (ரேகை)
Equilibrium	சமநிலை

BIOLOGY

உயிர் நூல்

Organism	ஜீவி
Parent Organism	உற்பவகாரண ஜீவி
Petal	அக இதழ்
Antennae	தும்பி
Stamen	புருஷ நாளம்
Pistill	ஸ்திரீ நாளம்

GEOLOGY

பௌமிய சாஸ்திரம்

Mine	கனி
Gypsum	சிலாசத்து
Ore	கனிஜதாது
Iron	அய(ம்)
Coprolite	மச்ச எச்சக்கல்
Foosil	சிலாபவம்
Red sandstone	செம்மணற்பாறை
Strata	அடுக்குக்கள்

Crystal	படிகம்
Crystallographer	படிகவாதி
Strata of the Earth	பூமியின் படைகள்
Parallel	சமதார
Scratches	கீறல்கள்
Snowflake	உறைபனித்தகடு
Geologist	பௌமிய சாஸ்திரி

OTHER

பிற

Imitate	அனுசரித்தல்
Woodcut	உருவகிர்ந்த கட்டை
Contour map	சாயற்படம்
Manipulation	கைவினைச் சக்தி
Incidental	இடைச்சம்பவம்
Remark	சூசனம்
Officiousness	முன்னீட்டு
Association	வாசனை
Laws of mental association	மனோவாசனா நியமங்கள்
Economy of Time	காலச் செட்டு
Sympathy	சமதாபம்
Indifference	உபேக்ஷை

தார்கள். உழைக்கும் நாட்களில் இவர்கள் உற்சாகத்தோடு வேலை செய்தார்கள். ஓய்வு நாட்களையும் உற்சவநாட்களையும் சோம்பலுக்கும் வீண்சுகத்துக்கும் உரியவைகளென அநுஷ்டித்தார்கள்; [1]கர்த்தர் பிறந்த நாளிற்பாடும் ஞான கீதத்தை ஆதரித்தார்கள். உண்மைக் காதல் ஐக்கியபந்தக் குறிப்பை [2]வாலெண்டைன் காலையில் அனுப்பினார்கள். [3]விபூதித் திருநாளுக்கு முன் தினமாகிய மங்கள வாரத்தில் மாமிசம் புசியாமல் [4]ஓட்டடைகளைச்சுட்டு வீட்டுக்குவீடு வழங்கினார்கள்; ஏப்ரல் மாதமுதல்நாளில் தங்கள் அறிவின் நுட்பத்தைக் காட்டினார்கள்; செப்டம்பர் இருபத்தொன்பதில் வரும் மிக்கேல் ஞானியார் திருநாள் முடிவுக்குச் சற்று முந்தின ஆதிவாரத்தில், தேங்காயைப்போன்ற பற்பலகொட்டைகளை உடைத்தார்கள். எங்கள் வருகையை அறிந்தவுடனே அக்கம் பக்கம் அடங்கலும் அவர்கள் ஆசாரியனை எதிர்கொண்டு காணவந்தார்கள். அவரவர்களும் நாணயமாய் உடுத்திருந்தார்கள்; அவர்கள் கூட்டத்துக்கு முந்தி ஆட்டம் பாட்டமாய்க் கொம்பூதினார்கள்; [5]பறை மோதினார்கள்; வாழ்த்து பாடினார்கள் எங்கள் வரவேற்கையை முன்னிட்டு ஒரு விருந்துநடந்தது. அதில் நாங்கள் எல்லாரும் உற்சாகத்தோடு கலந்து உட்கார்ந்தோம். எங்கெங்கு வேடிக்கையாய்ப் புத்திநுட்பமாய் பேசவேண்டுமோ அங்கங்கு நகைப்பாய் முடிந்தது.

எங்கள் சிறு வீடுவாசல், சரிவான மலையடிவாரத்தில் பொருந்தியிருந்தது. அதற்குப்பின்புறத்தில் அழகான சிறு மரத்தோப்பும், பின் புறத்தில் காதுக்கினிமையாய்ச் சலசலவென்றோடும் நதியும் இருந்தன. ஒரு புறத்தில் புல்செறிந்த மேய்ச்சல் நிலமும் மறுபுறத்தில் பச்சைப் பசேரென்று பயிர் நிறைந்த விளைச்சல் நிலமும் விளங்கின. எனது விளை நிலம்

(1) கிருஸ்துபிறந்தநாளிற்பாடும் பாட்டு

(2) வாலெண்டைன் = Valentine (see)

(3) விபூதித்திருநாள் = சாம்பற் புதன்கிழமை (Ash Wednesday)

(4) ஓடு அடைகள் = ஓடுபோல அகலமாய்ச் சுடும் பண்ணிகாரங்கள்

(5) பறை = ஒரு கட்பறை

பதினைந்து [1]காணியளவுகொண்ட [2]பக்குவமான நன்செய்ப் பூமி. எனக்குமுன் அதை ஆண்டுவந்தவருடைய உரிமையைப் பெறுவதற்கு நான் நூறு பவுன் கொடுத்தேன். என்னுடைய சிறு [3]கொல்லைகளின் திருத்தம் எதற்கும் வராது; அதில் வனவிருக்ஷவேலிகள் வாட்டமாய் அமைந்திருந்ததனால் அழகின் விசேஷம் சொல்லுந்தரமன்று. என் வீடு ஓரடுக்கு வீடாய்க் [4]கூரைமேய்ந்திருந்ததனால் குளிருக்கடக்கமாய் வசதியாயிருந்தது. உட்புறச் சுவர்கள் வெள்ளைவெளேரென்று நன்றாய்ச் சுண்ணாம்பு பூசியிருந்ததனால், அவைகளைத் தாமே குறித்து, எழுதின சித்திரப் படங்களால் அலங்கரிக்க என் பெண்கள் ஏற்பட்டார்கள். கூடமும் சமையல் இடமும் ஒன்றாய் இருந்தன. அப்படியிருந்ததனால் ஒன்றுங் குற்றம் இல்லை. மிதச்சூடாய்க் குளிருக்கிதமாய் வசதிக்கிடம் பண்ணிற்று சமையல் அறை மெத்த ஒழுங்காய் அமைந்து, வட்டில்களும் தட்டுகளும், தாம்பாளங்களும், தவலைகளும் வரிசையாய்ச் சுவரறைகளில் வைத்து ஒளி வீசினதினால் கண்ணுக்கழகாய், வேறுவிலை உயர்ந்த தட்டுமுட்டுகள் வேண்டாமென்றிருந்தது. அஃதன்றி வேறு மூன்றறைகள் இருந்தன; ஒன்று எனக்கும் என் மனைவிக்கும்; எங்கள் அறைக்குள் அறையாயிருந்த மற்றொன்று என் இரண்டு பெண்களுக்கு; இரண்டு படுக்கைகளோடிருந்த இன்னொன்று மற்றக் குழந்தைகளுக்கு.

இந்தச் சிறு குடி அரசுக்கு நானே சட்ட திட்டங்கள் ஏற்படுத்தினேன். அது பின் வருகிறபடி ஒழுங்காய் நடந்தது. சூரியோதயத்தில் நாங்கள் எல்லோரும் எங்கள் பொதுவறையிற் சேர்ந்தோம். அங்கே அதற்கு முந்தியே வேலையாள் [5]நெருப்பு மூட்டி வைததிருந்தாள். நாங்கள் ஒருவரை

(1) காணி 120 கொண்டது 160 ஏக்கர்

(2) பக்குவமான = வளமான

(3) கொல்லைகள் = புன்செய் நிலங்கள்

(4) கூரை = வைக்கோற் கூரை

(5) ஒவ்வோர் அறையிலும் நெருப்பெரிவது இங்கிலாந்திய வழக்கம்; அது எரிந்தால்தான் குளிருக்கு வசதியாயிருக்கும்

ஒருவர் ஒழுங்காய் வந்தனவழிபாடுகள் செய்தானபிறகு கை, வாய், தலை முதலிய அங்கங்கள் தமக்குத் தக்கபடி முறையே தொழுதும் வாழ்த்தியும், வணங்கியும் உயர்தர ஆசாரத்தில் இயற்கையாய் பழகித் திகழ்ந்திருப்பது சரியான காரியம் என்று எப்போதும் எண்ணியிருந்தேன். அப்படியில்லாவிட்டால், ஏதேச்சை எப்போதும் இஷ்டத்துக்கு* நஷ்டமுண்டாக்கும். எங்களை வாழ்வித்து, எங்களுக்கு அற்றைநாளை அருளிய ஆதியம்பகவனுக்கு எல்லாரும் ஒன்றாய் நன்றி செலுத்தினோம்.

'வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல' என்பது பழமொழி. இந்தக்காலைக்கடன் முடிந்தவுடனே, நானும் என்மகனும் எங்கள் வழக்கம்போல வெளியே பயிர்த்தொழிலைப் பார்க்கப்போனோம். என்மனைவியும் பெண்களும் காலை ஆகாரத்தை ஏற்படுத்தும் வேலையில் இருந்தார்கள். அது காலக் கிரமப்படி எப்போதும் ஆயத்தமாயிற்று. இது உண்டு முடிவதற்கு அரைமணிகாலமும், பகற்போசனத்திற்கு ஒருமணிநேரமும் நியமித்திருந்தேன் இந்தக் காலத்தை மெத்தக்களிப்பாய் என் மனைவியும் பெண்களும் வேடிக்கையாய்க் களங்கமற்ற வார்த்தை சொல்லிக் கழித்தார்கள்; என் மகனும் நானும் ஞானமார்க்கமான வாதத்திற் போக்கினோம்.

நாங்கள், சூரியன் உதயமாகும்போது எழுந்தவர்களாகையால் அவன் அஸ்தமிக்கும்போது வேலையை நிறுத்தினோம். அதற்கப்பால் வேலைசெய்வதேயில்லை; எங்களை எதிர்நோக்கியிருக்கும் குடும்பத்தைச் சந்திக்க ஆவலாய்த் திரும்பி வந்தோம். அங்கே நகைமுகமும், நாணயமான அடுப்பும், வசதியான நெருப்பும் எங்கள் வரவை எதிர்நோக்கி ஆயத்தமாயிருந்தன எங்களுக்கு விருந்தாளிகள் இல்லாமல் இல்லை; சில சமயங்களில் †பிளாம்ரோக் குடியானவர் வருவார்; அவர்

---

*ஏதேச்சை = யதேச்சை = தன்னிச்சை = சுவேச்சை.

† பிளம்பரோ = (Farmer Flamborough) பிளாம்பரோ என்னும் பெயருடைய குடித்தனக்காரர்.

மெத்தப் பேச்சுக்காரர்; எங்களுக்கு அதிக சமீபத்தில் இருந்தார்; அடிக்கடி *குழலூதும் குருடா ஒருவர் வருவதுண்டு.

அடிக்கடி இவர்கள் எங்கள் நெல்லிரசபானத்தை ருசி பார்ப்பார்கள். இந்தப் பானஞ் செய்வதில் எங்கள்பேர் நெடுந்தூரம் பரவியிருந்தது. இதற்காக அநேகர் வந்து கொண்டே இருந்தார்கள். இந்தக் குற்றமற்ற ஜனங்கள் பல விதத்திலும் நல்ல சகவாசமாயிருந்தார்கள். ஒருவர் குழலூதிக்கொண்டிருந்தால் மற்றொருவர் அதற்குத்தக்கபடி பாட்டுப் பாடுவார்- †ஜான்னி ஆர்ம்ஸ்டார்ங்ஸ் 'லாஸ்ட் கூட்னைட் பாலட்' (ஜான்னி ஆர்மஸ்ட்ராங்கின் கடை இராவந்தனப்பாட்டு) அல்லது ‡தி க்ருவெல்டி ஆப் பார்பாரா ஆல்லென்பாலட் (பார்பாமா ஆல்லென் கொடுமைப் பாட்டு) பாடுவார்-காலையை எப்படித் தொடங்கினோமோ அப்படி இரவை முடித்தோம். எனது §இளஞ்சிறுர்களை அன்றுடம் சத்திய வேத புத்தகத்தில் நியமித்தபாடங்களை படிக்க ஏற்படுத்தினேன். எவன் அதிக உரத்த சத்தமாய், தெளிவாய், நன்ருய் வாசித்தானே அவன் ஆதிவாரத்தன்று +ஏழைப்பெட்டியில் போடுவதற்கு அரைபென்னி பெற்றுன்.

ஞாயிற்றுக்கிழமைவந்தால் அது உண்மையாய் அலங்கார வஸ்திர பூஷண நாளாயிருந்தது குடும்பச் செலவை மிகப்படுத்த நான் இட்டிருந்த கட்டளையால், இந்த ஆதிவார அலங்கார ஆடை அணிகளைத் தடைசெய்ய முடியவில்லை.

‖உடையாலும் நடையாலும் பாவனையாலும் தற்புகழ்ச்சி கூடாதென்று நான் செய்தபிரசங்கங்களெல்லாம் எனதுபெண்

* குழல்=புள்ளாங்குழல்.

† ஜான்னி ஆர்ம்ஸ்டார்ங்ஸ் லாஸ்ட கூட்னைட் = Johnny Armstrongs 'Last Good-night.'

‡ தி க்ருவெல்டி ஆப் பார்பாரா ஆல்லென்=The 'Cruelty of Barbara Allen.'

§ இளஞ்சிறுர்கள் = இளைய பையன்கள்.

+ ஏழைகளுக்கு உதவி செய்வதற்காகப் பணம் சேர்த்து வைக்கும் உண்டியல்.

‖ நடையுடைபாவனை என்பது வழக்கச்சொல்.

மக்களின் வீண் பெருமையை வென்றுவிட்டனவென்று நான் எத்தனை நிச்சயமாய் எண்ணிக் கொண்டிருந்தேன் தெரியுமா! அப்படி இருந்தும் இன்னும் அவர்கள் ஆதியிற் செய்துவந்த ஆடை அணி அலங்காரங்கள்மேல் அந்தரங்கத்தில் ஆசை செலுத்தியிருந்தார்கள். இன்னும் அவர்களுக்குச் சரிகையின் மேலும் மேகலையின்மேலும் கருமணியாற் செய்த அலங்கார ஆபரணத்தின் மேலும் சித்திரத்தையல் ஆடையின்மேலும் ஆசைவிடவே இல்லை. என் மனைவிக்கும் * பாடுவாசாய் என்னும் கருஞ்சிவப்புப் பட்டாடையில் இன்னும் ஆசைமாறாமல் இருந்தது. ஏனென்றால் ஒரு சமயத்தில் நான் அது அவளுக்கு மெத்த அழகாயிருந்ததென்று சொல்லிவிட்டேன். முக்கியமாய் அங்கு சென்ற முதல் ஆதிவாரத்தன்று அவர்களுடைய நடக்கை எனக்கு மனவெறுப் புண்டாக்கிற்று. சனிக்கிழமை இரவிலேயே நான் என் பெண்களை நோக்கி, நாளைக் காலையில் நீங்கள் சீக்கிரமாய் உடுத்துக்கொண்டிருக்க வேண்டும்” என்று சொல்லியிருந்தேன். ஏனென்றால் மற்ற உபாசகக் கோஷ்டிக் கூட்டம வந்து சேர வெகுநேரத்துக்கு முந்தியே நான் கோயிலிலிருக்க எப்போதும் விரும்பினேன். என் ஏற்பாட்டிற்கு அவர்கள் சரியாய்க் கீழ்ப்படிந்தார்கள். ஆனால் காலையில் நாங்கள் உணவுக்காக ஒன்று கூடினபோது, என்மனைவியும் பெண்களும் அவர்களுடைய பழைய பெருமித மான உடுப்புகளோடு தோன்றினார்கள். அவர்களுடைய தலை மயிர் வாசனைத் தைலம் தடவிச் சாந்து பூசியிருந்தது. அவர்களுடைய முகங்கள் †கரும்பற்றால் அலங்கரித்திருந்தன. அவர்களுடைய அங்கித் தொங்கல்கள் குவியலாய்ப் பின்புறம் கட்டிவிட்டிருந்தன. ஆகையால் அவர்கள் அசையும் ஒவ்வோர் அசைவுக்கும் அவைகள் சலசலவென்று சத்தஞ் செய்தன. அவர்களுடைய வீண் பெருமையைக் கண்டு நான் சிரிக்காமலிருக்க முடியவில்லை; என் மனைவி வயதிற்

---

*பாடுவாசாய் = பாடுவா Paduvasoy என்னும் இடத்திற் செய்த பட்டாடை.

† கார்நிறத்தால் அலங்காரமாய்ப் பற்றுப்போட்டுத் தீட்டிக் கொள்ளுதல்.

பெரியவளாயிருந்தும் கொஞ்சங்கூடப் பகுத்தறிவின்றித் தோன்றினமையால் முக்கியமாய் அவள் விஷயத்தில்தான் எனக்குச் சிரிப்பதிகம். இந்த அவசரத்தில் எனக்கோர் யுக்தி தோன்றிற்று. ஆகையால் நான் என் மைந்தனை நோக்கி, "தம்பீ! சீக்கிரம்போய் நமது நாலுசக்கர வண்டியைப் பூட்டச் சொல்" என்று பெருமிதமாய்க் கட்டளையிட்டேன். இந்தக் கட்டளையைக் கேட்டவுடனே பெண்கள் ஆச்சரியமாய்ப்பார்த்தார்கள். நான் சும்மா விட்டுவிடவில்லை. மறுபடியும் மறுபடியும் முன்னிலும் அதிக பெருமிதமாய்ச் சொல்லிக்கொண்டே யிருந்தேன். உடனே என் மனைவி, "எனக்குத் தெரியும் *அத்தான். நிச்சயமாய்த் தெரியும், நீர் விளையாடுகிறீர்" என்று உரத்துப் பேசி "நாம் ஒன்றாய் நடந்துபோகலாம்; இப்போது நாம் போவதற்கு வண்டி வேண்டியதே இல்லை" என்றாள். "நீ சொல்லுவது பிசகு, நமக்கு அவசியமாய் வண்டி வேண்டும். இந்த அலங்கார ஆடை அணிகளோடு நாம் கோயிலுக்கு நடந்துபோனால் நமது குரு வாட்சி ஸ்தானத்திலுள்ள குழந்தைகளும் நம்மைத் தொடர்ந்துவந்து கூவிப்பரிகாசம் பண்ணுவார்கள்" என்றேன். "அப்படியா இந்த விஷயத்தில் என் எண்ணமே வேறு-என் †சார்லஸுக்குத் தம் குழந்தைகள் ஒழுங்காய் அழகாய்த் தம்மைச் சூழ்ந்திருப்பதைக் காணப் பிரியமென்று இதுவரையிலும் எண்ணியிருந்தேன்" என்றாள் என் மனைவி. "சரி, நீ எவ்வளவு வேண்டுமானாலும் ஒழுங்காய் இருக்கலாம். அதை யார் வேண்டாம் என்பார்கள். அதற்காக உன் விஷயத்தில் எனக்கு ஆசை அதிகமாகும். ஆனால் இப்போது இந்த அலங்கார ஆடை அணிகளெல்லாம் ஒழுங்கல்ல; பழங்கந்தைகள். இவைகளில் இந்த சுருக்குகளும், இணைப்புகளும், நிறங்களும் புறங்களும் என்ன செய்யும். நமது அண்டை அயலாருடைய மனைவி மக்கள் இவைகளைக் கண்டவுடனே நம்மை வெறுக்கச் செய்யும். இன்னும்

* அத்தான் =(இது மைடியா) என்று அங்கிலத்தில் இருக்கிறது
† சார்லஸ் = கணவனைப்பெயர் சொல்லி அழைப்பது அங்கிலேயருக்குள் சாதாரணம்.

நன்ருய் நிதானித்துப் பாருங்கள்; குழந்தைகாள்!'' என்று என்பெண்களை நோக்கிப் பெருமிதமாய் "அந்த அங்கிகளைச் சாதாரணமாய் வெட்டி மாற்றிவிடலாம். ஏனென்ருல் மேலழுகாய்த் தோன்றும் அலங்காரவஸ்திர பூஷணங்களெல்லாம் நமக்குத் தகுந்தவைகளல்ல. நமக்கு வேண்டியதெல்லாம் ஒழுக்கம்; ஒழுக்கத்துக்கு வேண்டியது சாதாரண ஒழுங்கே அன்றி இப்படிப்பட்ட வீண் பெருமையான வெளிவேஷமல்ல. இப்படிப்பட்ட சுருக்கம், பெருக்கம், தொங்கலும் மூன்தானையும் கந்தைகளின் இணைப்பும், பிணைப்பும் பணக்காரர் வீட்டுப் பெண்பிள்ளைகளுக்கும் உண்டோ! அல்லது தகுமோ! என்று எனக்குச் சந்தேகமாயிருக்கிறது சாதாரணாய் நாம் கணக்கோட்டிப் பார்த்தால் வீண் பெருமை உலகத்தாருடைய ஆடைச் சுருக்கையும் பெருக்கையும் நெருக்கினல் வறுமை உலகத்தாருடைய அம்மணம் மறைந்துபோகும் என்று தொடர்ச்சியாய்ப் பேசினேன்.

இந்த எச்சரிப்பு வார்த்தை சரியான பலனைக் கொடுத்தது; என்மனைவியும் பெண்களும் மெத்த அடக்கமாய்ப்போய் அந்தக்கணத்திலேயே தமது உடைகளை மாற்றிவிட்டார்கள். மறுநாள் அவர்கள் தத்தம் அங்கியின் தோகையைக் கத்தரித்து தம்பிமார்களாகிய டிக்கிக்கும் பில்லுக்கும் ஞாயிற்றுக்கிழமை போட்டுக்கொள்ளுவதற்கு இடுப்புச் சட்டைகள் (waist-coats) தைத்தார்கள். என்னுடைய எச்சரிப்பை மறவாமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்து அவர்கள் தம் மிச்சையாகவே இப்படிச் செய்தது எனக்கு மெத்த திருப்தியாயிருந்தது. இன்னும் இதைவிட மன நிறைவு என்னவென்ருல் அங்கிகளைக் கத்தரித்துக் குறைத்தபிறகு அவைகள் அதிக அழகாய்விளங்கின தேயாம்.

ரு-ம் அதிகாரம்.

ஒரு பெரிய [1]புத்தறிமுகக்காரர் புகுதல். எதை நாம் மெத்த நம்பியிருக்கிறோமோ, அதுவே சாதாரணமாய் அதிக ஆபத்தாய் முடிகிறது.

நாங்கள் இருந்தவீட்டுக்குக் கொஞ்சதூரத்தில் எனக்கு முன் என்வேலையிலிருந்தவர் ஓர் [2]உறையிடம் உண்டாக்கியிருந்தார். அதைச்சூழ [3]ஹாதார்ன், [4]ஹனிஸக்கில் என்கிற செடிகள் வேலியாய் நீண்டு வளர்ந்து நிழல் செய்தன. இங்கே நாங்கள் சாதாரணமாய் மப்பு மந்தாரம் இன்றிக் காலஇயற்கை சரியாய் இருந்தபோது எங்கள் வேலைமுடிந்தவுடனே ஒன்றாய் உட்கார்ந்துகொண்டு மாலை அமைதியில் ஒருபெரிய [5]தேசக்காட்சியைக் கண்குளிரக்காண்பது வழக்கம். இங்கே நாங்கள் [6]தேத்தண்ணீர் குடித்தோம். இப்போது அது எப்போதோ ஒரு சமயத்தில் குடிக்கும் விருந்தாய்விட்டது. அதை நாங்கள் குடிக்குந்தோறும், இது ஒரு புது மகிழ்ச்சியைப்பெருக்கிற்று. அதற்காகச் செய்யவேண்டிய ஏற்பாடுகளை மெத்தப் பரபரப்பாயும் சுறுசுறுப்பாயும் செய்தார்கள். இந்தச் சமயங்களில் எங்கள் இரு சிறு பையன்களும் எங்களுக்காக வாசித்தார்கள். நாங்கள் குடித்தானபிறகுதான் வழக்கமாய் அவர்கள் குடித்தார்கள். சிற்சில சமயங்களில் எங்கள் வேடிக்கைவினோதங்களுக்கொருமாறுதல் உண்டாக்கும் வண்ணம் பெண்கள் வீணை வைத்துக்கொண்டு பாடினார்கள். இப்படியவர்கள் [7]ஒரு சிற்றிசைக் கூட்டத்தினராயிருக்கையில்

1. புது அறிமுகக்காரர் = புதிதாய நேசமானவர்
2. உறையிடம் = நிலையம்
3. ஹாதார்ன் = (Hawthorn)
4. ஹனிஸக்கில் = (Honey suckle)
5. தேசக்காட்சி (Landscape)
6. தேத்தண்ணீர் (Tea)
7. சிறு இசைக்கூட்டம் (Concert)

காலும் என் மனைவியும் சரிவான வயற்புறங்களில் சாரிபோவது வழக்கம். அங்கு *நீலோற்பலமும் †ஸென்டாரி யென்னும் மருத்துப்பூடும் அலங்கரித்து விளங்கும். நாங்கள் இருவரும் உலாவிக்கொண்டே எங்கள் மக்களைப்பற்றிப் பரமானந்தமாய்ப் பேசி, தேகசுகத்தையும் மனோசுகத்தையும் வளர்க்கக்கூடிய மாலைக்காற்றை அனுபவித்தோம்.

இப்படி, வாழ்நாளின் ஒவ்வொரு நிலைமையும் அதற்குத் தக்கபடி ஒருவிதமான இன்பத்தைக் கொடுக்கலாம் என்று நாங்கள் அனுபவத்திற் கண்டுபிடித்தோம். ஒவ்வொரு காலையும் நாங்கள் செய்த வேலையையே திரும்பவும் செய்வதற்கு எங்களை எழுப்பிவிட்டது. ஆனால் சாயங்காலமோ அந்த இளைப்பைச் சரிப்படுத்துவதற்கு ஓய்வுச் சுகத்தைத் திருப்பிக் கொடுத்தது.

இலையுதிர்காலத்தின் துவக்கத்தில் ஓர் ஓய்வுநாளில், இப்படிப்பட்ட சிரம பரிகாரத்தை நான் ஏற்படுத்தினேன். ஆகையால் எனது குடும்பத்தை வழக்கம்போல இளைப்பாறுவதற்கு, இதுவரையிலும் நாங்கள் வந்துகொண்டிருந்த விநோதவேடிக்கையான இடத்திற்கு வரவழைத்திருந்தேன். அப்போது எங்கள் சிற்றிசையாளர்கள் தமதுவழக்கம்போலப் பாடத் தொடங்கினர்கள். இப்படி நாங்கள் வேடிக்கையாய் இருக்கையில் மான் ஒன்று வேகமாய் ஓடக்கண்டோம். எங்களுக்கும் அது ஓடின இடத்திற்கும் அதிக தூரம் இல்லை. எல்லாம் இருபது அடிக்குள்ளேதான் இருக்கும். அது ஓடும்போதே இரைப்பு வாங்கினதால் அதைத் தொடர்ந்து வேட்டைக்காரர்கள் வந்தார்கள் என்று நன்றாய்த் தெரிந்தது. அந்த மானுக்கு வந்த துன்பக் காரணத்தைப்பற்றி நாங்கள் நன்றாய் யோசிக்கிறதற்குள் நாய்களும் குதிரையேறிகளும் தென்பட்டார்கள். அவர்கள் ஒரே பாய்ச்சலாய் அந்த மான்வந்தவழியே கொஞ்சதூரத்திற் பின் தொடர்ந்து வேகமாய் வந்தார்கள். உடனே நான் குடும்

* நீலோற்பலம் = Bluebells.

† ஸென்டாரி = Centaury.

பத்தோ டெழுந்து உள்ளிடத்திற்குப் போகப்பார்த்தேன். ஆனல் விநோதமோ, அதிசயமோ, இன்னும அந்தரங்கததில் ஒருவிதஎண்ணமோ என்னவோ தெரியவில்லை. என் மனைவியும் பெண்களும் இருந்தவிடத்தில் அப்படியே இருந்துவிட்டார்கள். முன்னே குதிரை ஏறிவந்த வேட்டைக்காரன் அவசரமாய் எங்களைக் கடந்துபோய்விட்டான். அவனைத் தொடர்ந்து இன்னும் நாலைந்துபேர் குதிரை ஏறிகள் அதிவேகமாய் அவனைப்போலவே அவசரமாய் எங்களைக் கடந்து போய்விட்டார்கள். கடைசியாக மற்றவர்களைவிடப் பெருமிதமான முகத்தோற்றமுடையவாலிபர் ஒருவர்முன்னே தோன்றினர். கொஞ்சநேரம் எங்களைக் கவனித்து மானைத் தொடர்வதைவிட்டுத் தடையாய்நின்றார். தொடர்ந்து வந்திருந்த ஆளிடத்திற் குதிரையைக்கொடுத்து எங்களைநோக்கிப் பெருமிதமாய் எதையும் கவனிக்காதவர்போல் வந்தார். அவர்க்கு அறிமுகவுரை* அநாவசியம்போல் இருந்தது. உடனே என்பெண்களை வந்தனம்செய்து முத்தங்கொடுக்கப் போனர். தடையொன்றும் இராதென்பது அவருடைய தப்பெண்ணம். ஆனல் என்பெண்கள் அதுவரையிலும் தாங்கள் பட்டறி கெட்டறி என்றபடி பட்டறிந்த அனுபவத்தால் மூத்தோற்றத்தில் எதையும் நம்பிவிடப் பின்னிடைந்தார்கள். அது கண்டவுடனே அவர், தமது பெயர் தார்ன்ஹில் என்று வெளியிட்டார். அப்போது எங்களைச் சூழ்ந்திருந்த அவ்வளவு விஸ்தீரண பூஸ்திதியும் அவருடையதே என்றும் தெரிவித்தார் மறுபடியும் அவர் எங்கள் குடும்பப் பெண்பாலர்களுக்கு முத்தங்கொடுக்க முன்வந்தார். செல்வமும் சிறந்த உடையும் எவ்வளவு வேலைசெய்கின்றன. அவைகளுக்குள்ள வல்லமையே வல்லமை! இந்த முறை அவர்க்கு யாரும் தடைசொல்லவேயில்லை. அவருடையபேச்சு உள்ளாழமுள்ளதானாலும் வெள்ளையாய் நயமாய் இருந்ததனல் நாங்கள் எல்லோரும் சீக்கிரத்திற் பழகிக் கலந்துகொண்டோம். அவர் அங்கே இருந்த வீணை வாத்தியத்தைக்கண்டதனல் தயைசெய்து ஒருபாட்டுப் பாடவேண்டும் என்றுவேண்டிக்கொண்டார். அத்தனை ஏற்றத்தாழ்வான அறி

* அறிமுகவுரை = (Introductory words)

முகத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால் என் பெண்கள் எங்கே அவசரப்பட்டுப் பாடப்போகிறார்களோ என்றெண்ணி அவர்களைத் தடுப்பதற்குக் கண்சாடை செய்தேன். ஆனால் அதற்குள், அவர்கள் தங்கள் தாயார் செய்த சமிக்கை யால் என் குறிப்பைக் கவனிக்க வேயில்லை. அதனால் அவர்கள் யாருக்கும் பிரியமான *டிரைடன் பாட்டை ஆனந்த மாய்ப் பாடினார்கள் அது கேட்ட தார்ன்ஹில் மிகவும் மன மகிழ்ந்ததாகத் தோன்றினார்.

அவர்கள் பாடின அருமைக்கும் பாட்டின் மகிமைக்கும் வியந்ததாகக் காட்டி வீணையைத் தாமே வாங்கிக்கொண்டார். அதை அசட்டையாய் மீட்டி வாசித்தார். ஆனாலும் எனது மூத்த மகள், அவர் தனக்குக் காட்டிய வியப்பைத் திருப்பிக் காட்டுவதற்காக அவரைக் கொண்டாடி வியந்தாள்; தன் உபாத்தியாயர் குரலைவிட அவருடைய குரல் அதிக சத்த மாயிருந்ததென்று வற்புறுத்திப் பேசினாள். இப்படி அவள் பேசினபோது அவர் வணங்கி அங்கீகரித்தார் அவளும் அதை மரியாதையாய்த் திருப்பினாள். அவளுடைய இசை யுணர்ச்சியை அவர் புகழ்ந்தார்; அவருடைய இசைப்புல மையை அவள் கொண்டாடினாள். இதைவிட வேறு வித மான அறிமுகம் அந்த வயதுக்கு அதிகம் வேண்டுவ தில்லை. தாயாரும் அதிக அன்பாய்த் தன் வீட்டுக்குச் சொந்தக்காரராகிய தார்ன்ஹில் துரையை, உள்ளேவந்து செல்விரஸப்பானம் பருகவேண்டினாள். குடும்ப முழுமை யும் அவரைத் திருப்தி செய்வதிலேயே கருத்தா யிருந் தது. என் பெண்கள் புது விஷயங்களென்று தாங்கள் எண்ணிருந்தவைகளில் அவர்க்குப் பராகுக் காட்ட முயன் றார்கள். அதற்கு நேர் விரோதமாக என் குமாரன் மோசஸ் பூர்வீகர்களைப்பற்றி அவரை இரண்டொரு கேள்வி கள் கேட்டான். அதற்கவர் நகைத்தார். அதையே அவன் சந்தோஷமாய்க் கொண்டாடினான். என் சிறு குழந்தைகள் கூடச் சும்மாவில்லை; அவர்களும் பரபரப்பாய், புதிய விடத்

* டிரைடன் பாட்டு=Song of Dryden's.

திற்கு ஓடுவதும் அவரை விடாமல் ஆசையாய் அவரோடு கூடியிருப்பதுமாய் இருந்தார்கள். அவர்கள் தங்கள் அழுக்கு விரல்களால் அவருடைய உடுப்புகளின்மேற் சரிகைகளை அழுக்காக்குவதும் கறையாக்குவதுமா யிருந்தார்கள். என்னாலானவரையில் தடுத்தேன். அவருடைய சட்டைப் பையின் மேல்மூடியைத் திறந்து அதற்குள் என்ன இருந்ததென்று அவர்கள் பூராயமாய்ப் பார்த்தார்கள் அதையும் நான் கூடாதென்று அதட்டினேன். எதுவும் பிரயோஜன மில்லாமல் போய்விட்டது. நான் தடுத்தது, தடுத்தது தான்; அவர்கள் எடுத்தது; எடுத்ததுதான்; பிடித்தபிடியை விடவேயில்லை. எல்லாவற்றிற்கும் அவர் புன்சிரிப்பாய் இருந்து, சாயங்காலம் விடைபெற்றுக்கொண்டார். அதற்கு முந்தியே, அவர், அடிக்கடி எங்களை வந்து காண உத்தரவு கேட்டிருந்தார். எங்கள் வீட்டுக்குடையவராகையால் அவருடைய வேண்டுகோளுக்கு நாங்களும் தவக்கமின்றி ஒப்புக்கொண்டோம்.

அவர் போனவுடனே அன்று நடந்த நடவடிக்கையைப் பற்றி என் மனைவி ஒரு கூட்டங் கூட்டினாள். அது அதிர்ஷ்ட வசமாய் முடிந்த தென்பது அவளுடைய அபிப்பிராயம். அதைவிட அதிர்ஷ்டமான விஷயங்கள் நேரிட்ட அநுபவம் அவளுக்கு உண்டு. மறுபடியும் அப்படிப்பட்ட நாள் வர வேண்டும்; அந்த நாளில் நாங்கள் எல்லாம் இன்னும் அதிக நன்றாய்க் காரியசித்தி பெறவேண்டும் என்று அவள் கோரினாள். கடைசியாக அவள், ஏன் அந்த இரண்டு ரிங்க்ளர்* மிஸ்களும் பெரிய பணக்காரர்களைக் கலியாணம் செய்து கொளளவேண்டும்? என் குழந்தைகள் மட்டும் ஏன் அப்படிச் செய்யக் கூடாது, எனக்கோ காரணம் விளங்க வில்லை, என்று மறுத்துப் பேசினாள். இந்தக்கடைசி விவகாரம் என்னை நோக்கிவந்தபோது "இருதிறத்தாரும் அப்படிச் செய்யக் காரணம் எனக்கும் தெரிய வில்லை என்று மறுத்துப் பேசினேன். இதோடு †சிம்பி கின்ஸ்க்குப் பதினாயிரம் பவுன்

* மிஸ் ரிங்களர்ஸ = Miss Wrinkles.

† Mr. Simkins.

வெகுமதி, பந்தயச் சீட்டில் வந்தபோது நமக்கேன் வெறுஞ் சீட்டு வந்தது ?" என்றும் வாதித்தேன்.

அதுகேட்ட என் மனைவி, "சார்லஸ், நீர் எப்போதும் இப்படித்தான். என்னையும் என் பெண்களையும் முன்னுக்கு வரவொட்டாமல் தடுக்கிறீர். நாங்கள் உற்சாகமாய் இருந்தால் அதை நீர் எப்போதும் தடுக்கிறீர்" என்று எதிர்த்துப் பேசி, தன் சின்ன மகளை நோக்கி "சோபை! நீ என்ன நினைக்கிறாய்? அம்மே, நம்மை வந்து கண்ட புதுமனுஷரைப் பற்றி உனக்கு என்ன தெரிகிறது ? அவர் மிகவும் நல்லவராகத் தோன்றினாரல்லவா?" என்று வினவினாள்

"அம்மா! அதெதற்கென்ன தடை, மிகவும் நல்லவர் தான். ஆனால் எந்த விஷயத்தைப்பற்றியும் அவர் அதிகஞ் சொல்லப் பிரியப்படுகிறார். அப்படியே சொல்லியும் முடிக்கிறார். விஷயம் எவ்வளவுக்கெவ்வளவு அற்பமோ, அவ்வளவுக்கவ்வளவு அவர் சொல்வது அதிகமாயிருக்கிறது" என்று விடை கூறினாள் சோபை. அதற்குள் ஒலிவியா "ஆம் ஆம்" என்று பேசத்தொடங்கினாள் "ஆண்பிள்ளை என்றால் அவருக்கே தகும். ஆனால் அவரைபபற்றி எனக்குப் பிடிக்கவேயில்லை. அவருக்குக் கொஞ்சம் கூட வெட்கமேயில்லை. என்னோடு எத்தனையோ நாள் பேசிப்பழகினவர்போல் பேசினார். ஆனால் வீணையில் விசேஷ விற்பன்னர்" என்று பரிகாசமாய்ப் பேசி முடித்தாள்.

இந்த இரு பெண்களின் பேச்சுகளையும் எதிரிடையாய் அர்த்தம்பண்ணின நான் இதனால் என்ன கண்டு பிடித்தேன்? சோபை அந்தரங்கத்தில் அவரை அவமதித்தாள். அவள் எவ்வளவுக் கெவ்வளவு அவரை அவமதித்தாளோ அவ்வளவுக்கவ்வளவு ஒலிவியா உள்ளுக்குள்ளே வியந்தாள். "இருக்கட்டும் குழந்தைகளே! அவரைப்பற்றின உங்கள் அபிப்பிராயம் எதுவானாலும் ஆகட்டும்" என்று நான்பேசத் தொடங்கினேன். "உண்மையாய்ச் சொல்லுமிடத்து என்னை அவர் இன்னும் தம்வசப்படுத்தவில்லை. என் மதிப்பில் அவர் ஏறவில்லை. பொருத்தமில்லாத நேசங்கள் வெறுப்பாய் முடிகின்

றன. அத்தனை இலேசாய் நம்மிடத்தில் அவர் வலிய வந்து நட்புப் பாராட்டினபோதிலும் நமக்கும் அவர்க்குமுள்ள நிலைமையின் பேதத்தை அவர் எண்ணுமலில்லை. அது விஷயத்தில் அவர்க்கு முழு நோக்கம் உண்டு, என்று நன்ருய்த் தெரிகிறது.

‘கலவியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமும் செல்வமெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின்’

என்னும் முதுமொழிப்படி பணக்காரனும் உள்ளபடி வணக்கமுடையவனுனல்தான் அவனை நாம் பணக்காரனென்று மதிக்கலாம். ஆகையால் நாம் நமக்குச் சரியானவர்களோடு நட்புகொள்ளக்கடவோம். பொருளைப் பொருளாகமதித்து அதையே தேடித்திரிகிறவன் மனிதனல்ல. அவனைவிட நாம் அருவருக்கத் தக்கவர்கள் உலகில் வேறு யாரும் இல்லை.

‘பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.’ என்றபடி

வெறும் பொருளால்மட்டும் என்ன இருக்கிறது ? பொருள் கீழோரிடத்திலும் இருக்கிறது பொருளையே பொருளாக மதித்துக் கீழோரைப்போலப் புன்மதிபூண்டு, ஆண்மகனைப் போல பொருளையே தேடித்திரியும் பெண்மகளையும் நாம் ஏன் வெறுத்து ஒதுக்கிவிடக்கூடாது ? ஆண் ஆனுலும் பெண் ஆனுலும் பொருளாசையைவிட்டு அருளாசையைப்பற்றி வாழ்வதே அழகும் பெருமையுமாம்.

‘பொருளற்ருர் பூப்பர் ஒருகால் அருளற்ரு
ரற்ருர்மற் ருதல் அரிது’ என்பது வேதவாக்கு.

அவா விஷயத்தில் நாம் அவசரப்பட்டுச் சொல்லிவிடப் படாது. ஒருவேளை அவர்க்குப் பொருளாசை இருப்பதுபோல் நற்குணப்பயனுகிய அருள் ஆசையும் இருந்துவிடுமானுல், மிகவும் நன்ருயிருக்கும். அவரைப்பற்றி நாம் குறை கூறினதற்கு நம்மை அவர் வெறுக்க நேரிடும். அவருக்குப் பெரு

பிதமான நற்குணங்கள் பொருந்தியிருந்து, அருளுக்குப்பாத்திரவானயிருந்தால் அவரை நாம் வெறுப்பதுபோய், நம்மை அவர் வெறுக்கநேரிடும். எதற்கும் நாம் அவசரப்படக்கூடாது. ஒருவேளை நாம் சந்தேகித்தது சந்தேகித்தபடி சரியாய் அவர் பொருளாசைக்காரராகவேயிருந்து அருளாசைக்காரர் அல்லாவிட்டால், அப்படி எண்ணும்போதே நான் என் முழுமனத்தோடு அருவருத்து நடுங்குகிறேன். எனக்குச் சிறுபோதிலிருந்தே அனுபவம் இருப்பதால், என்பிள்ளைகளுடைய நடத்தையைப்பற்றிச் சந்தேகம் இல்லை என்பது நிஜந்தான்; ஆனாலும் முன்பின் அனுபவம் இல்லாத அவருடைய நடக்கையைப்பற்றி எனக்குச் சில சந்தேகங்கள் இல்லாமல் இல்லை" என்றுசொல்லிக்கொண்டே போனேன். இன்னும் வெகுதூரம் சொல்லிக்கொண்டே போயிருப்பேன். அதற்குள் தடை ஒன்றுநேரிட்டது. அந்தபெரிய மனிதர் வீட்டு வேலைக்காரன் ஒருவன் தோன்றினன். அவன் மான்கறித்துண்டமும் உபசாரக் கடிதம் ஒன்றும், கொண்டுவந்திருந்தான். அந்தக்கடிதத்தில் மான்கறித்துண்டை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இன்னும் சிலநாளில் எங்களோடு அவர் விருந்துண்ண சித்தமாயிருப்பதாகவும் எழுதியிருந்தது. இப்படிச் சமயோசிதமாய் வந்த வெகுமதி எங்கள் குடும்பத்தை அவர்விஷயத்தில் அதிகஆதரவாய் வார்த்தை சொல்லத்தூண்டினமையால், இன்னும்நான் பேசுவதிற்பயனில்லை என்று கண்டுகொண்டேன் ஆகையால்நான்; மௌனம் கலகநாஸ்தி என்று சும்மா இருந்துவிட்டேன் அவர்களுக்கு மேலழகாய்த்தோன்றும் உலகவிஷயத்தைப் பற்றி எவ்வளவு நான் எச்சரித்துச் சொல்லவேண்டுமோ அவ்வளவுஞ் சொல்லியாயிற்று. அதனால் வரும் ஆபத்தையும் காட்டியாயிற்று. இனி அவரவர்கள் இஷ்டப்படி புத்தியைக்கொண்டு சீர்தூக்கிப் பார்த்து நடந்து கொள்ளவேண்டியது. இதுவரையில் நாம் சொல்லிவந்தது போதுமானது, என்று நான் திருப்தியடைந்தேன். என்றும் அழியாமற் காக்கவேண்டிய அருமையான உத்தமகுணத்துக்குக் காவல் வேண்டியதில்லை.

அதிகாரம் 6.

நாட்டுப்புறத்து அடுப்பங்கரை இன்பம்.

மேற்கூறிய வாதத்தை நாங்கள் விடாமல் நெடுந்தூரம் கொண்டுபோனோம். விஷயத்தை விடாமல் விவகரிப்பதே எங்களுடைய நோக்கம். இப்படி வாதித்ததினால் கடைசியாக நாங்கள் இராப் போஜனத்திற்குக் கொஞ்சம் மான்கறி சமைப்பதென்று ஏற்பாடாயிற்று. அந்த வேலையை என் பெண்கள் உற்சாகத்தோடேற்றுக்கொண்டார்கள். 'எனக்கு விசனமாயிருக்கிறது" என்று நான் பேசத்தொடங்கினேன். "இப்படிப்பட்ட சமயத்தில் யாராவது விருந்தாளிகள் இருந்தால்தான் ஒழுங்கு. விருந்தில்லாத உண்டி மருந்து என்கிறார்களே, தெரியாதா! இது எப்போதும் கிடைக்கக்கூடியதா? மான் கறியோ தேன் கறியோ, என்பது பழமொழி. இப்படிப்பட்ட பெருமகிழ்ச்சியின்போது அண்டை அயலாராவது விருந்தாளிகளாவது கூடஇருந்தால் பேரானந்தமாயிருக்கும். இப்பேர்ப்பட்ட உணவை விருந்தாளிகளுக்கிட்டுண்டால் இரட்டைச்சுவைக்கு இடம் பண்ணும்."

'மருந்தேயாயினும் விருந்தோடுண்' என்பதுபழமொழி. "ஆஹா! இதோ வருகிறாரே. சொல்லிவைத்தாற்போல் வந்துவிட்டாரே! நம்முடைய நல்ல நண்பர், பர்ச்செல் துரை. நம்முடைய சோபையாவைக் காப்பாற்றினாரே. உம்மை வாதத்தில் பக்குவமாய்ப் பேசி வென்றாரே. அவர் இதோ வந்துவிட்டார்," என்றாள் என் மனைவி. "என்னையா வாதத்தில் வென்றார்!" என்று நான் பேசினேன். "பார்த்தையா நீ பேசுவது சரியாயில்லை; *குழந்தை! நீயும் அப்படிச் சொல்கிறாய் அல்லவா? எனக்குப் பிரியமுள்ள நீயா அப்படிப் பேசுவை. என்னைவெல்வோரும் உலகில் உண்டா! என்னைவெல்ல யாராலும் முடியா

---

*குழந்தை = விக்கார் தம் மனைவியை அழைக்கும் பிரியவார்த்தை.